# மலர் வகுப்பு



தாய்த்தமிழ் மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளி,
சூளேசுவரன்பட்டி, பொள்ளாச்சி - 642 006 (2007-08)

www.thamizham.net - Free E book - Education

இது ஆசிரியர்களுக்கு மட்டுமல்ல பெற்றோர்களுக்கும் தான்......

மலர் வகுப்பு என்பது 4 வயது முதல் 5 வயதுக்குக் கீழுள்ள மாணவர்களுக்கான வகுப்பு ஆகும். இந்த வகுப்பிற்கு வரும் மாணவர்கள் இரு வகையினர். . .

1. நேரடியாக மலர் வகுப்பிற்கு வருபவர்கள்.
2. மொட்டு வகுப்பைத் தாய்த்தமிழ்த் தொடக்கப்பள்ளியில் முடித்த பிறகு மலர் வகுப்பிற்கு வருபவர்கள்.

நேரடியாக மலர் வகுப்பிற்கு வருபவர்களுக்குத் தாய்த்தமிழ்த் தொடக்கப்பள்ளியின் நடைமுறையும்,பயிற்றுவித்தலும், அணுகுமுறையும் தெரியவாய்ப்பில்லை. இவர்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தவாறு இரண்டு அல்லது மூன்று குழுக்களாகப் பிரித்துக் கொள்ளவும். ஒவ்வொரு குழுவிலும் புதியவர்களை இணைத்துக் கொண்டு மொட்டுவகுப்பிற்கான பாடப்பயிற்சிகளை மீள்பார்வை செய்யவேண்டும். முதல் ஒருமாதத்திற்குச் சேர்க்கை நடைபெறுவதால், புதிய மாணவர்களின் பொருந்தாமை முழுமையான கற்றலுக்குத் தடையாக இருக்கும். இந்தச் சூழலில் குழுச்செயற்பாடுகளின் வழி நடைபெறுகிற மீள்பார்வை அனைத்து மாணவர்களையும் ஊக்கத்துடன் இயங்கவைக்கும். இதன்வழி பழைய மாணவர்கள் மறந்து போனவற்றை நினைவுபடுத்தவும், புதிய மாணவர்களுக்கு மொட்டு வகுப்பின் அடிப்படை கிடைக்கவும் வாய்ப்பாக இருக்கும்.

மொட்டு வகுப்பிற்கான அடிப்படையாக மாணவர்களுக்கு என்ன தெரிந்திருக்கவேண்டும்?

1. துணிச்சலாகப் பேசுவது, பாடுவது, தன் கருத்தைக் கூறுவது.
2. ஊக்கப்பாடல்கள், தெளிதமிழ்ச் சொற்கள், மதிப்புறவுச் சொற்கள், புலப்பயிற்சி.
3. எழுத்து எழுதுவது, படிப்பது (ட,ப,ம,ய,ர,ழ, ட்,ப்,ம்,ய்,ர்,ழ், டா,பா,மா,யா,ரா,ழா)
4. எண் சொல்லுவது (1 முதல் 50 வரை), எண் எழுதுவது (1 முதல் 20 வரை)

புதிய மாணவர்கள் என்ன செய்கிறார்கள்? எவற்றையெல்லாம் விரும்புகிறார்கள்? எப்படி அவர்களை அணுகுவது? என்பனவற்றை மலர் வகுப்பு ஆசிரியர், மொட்டுவகுப்பில் கண்டறிந்தது போல, இந்த ஒருமாத இடைவெளிக்குள் கண்டறிந்து கொள்ளவேண்டும்.

பழைய மாணவர்களிடமிருந்து புதிய மாணவர்கள் அதிகமாகக் கற்றுக்கொள்ள வாய்ப்புண்டு. எனவே மலர் வகுப்பு ஆசிரியர் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துக்கொண்டு, குழுச்செயற்பாடுகளைக் கொடுத்து, நண்பர்களிடமிருந்து கற்றலை, குழுக் கற்றலை ஊக்குவிக்கலாம்.

ஒரு மாதத்திற்குப் பிறகு மலர் வகுப்பிற்கான பாடங்களைத் தொடரவும்.

மழலைச் செல்வங்கள் ஆற்றலோடு வளர நாம் வழிஅமைப்போம்....



www.thamizham.net - Free E book - Education




அன்பிற்குரிய பெற்றோர்களுக்கு,

வணக்கம். நான்கு அகவையுடைய மழலைகளுக்கான பாடநூல் இது. உளவியல் அடிப்படையில் பல்வேறு ஆற்றல்களை வளர்த்தெடுக்கும் வகையில் அமைக்கப்பட்ட பாடத்திட்டத்தின் தொடரிதான் இந்தப் பாடநூல், இந்தப் பாடநூலில் மாணவர்கள் பாடிப்பழகுவதற்கான பாடல்களும், எழுதிப் பழகுவதற்கான படிநிலைகளும் தரப்பட்டுள்ளன.

மாணவர்களது உள்ளார்ந்த ஆற்றலை கண்டறிந்து, துணிச்சலும், தெளிவும், நுட்பமும் உடைய மாணவர்களை உருவாக்க இந்தப் படிநிலை உதவும். மாணவர்களிடம் புதைந்து கிடக்கிற ஆற்றல்களைக் கண்டறிந்து, முறைபடுத்தி, அறிவையும் ஆற்றலையும் வளர்த்தெடுத்து அவர்களது எதிர்கால நடைமுறைச் செயற்பாடுகளுக்கு வழிஅமைப்பதுதான் கல்வியின் நோக்கம் என்று கல்வி வல்லுநர்கள் கண்டறிந்துள்ளார்கள்,

இந்தப் பாடநூல் தமிழ், கணக்கு, சூழலியல் என்கிற பொதுவான பாடங்களோடு, தாய்த் தமிழ்த் தொடக்கப் பள்ளிகளுக்கே உரிய உயரிய அணுகுமுறைகளான ஊக்கப்பாடல்கள், தெளிதமிழ்ச் சொற்கள், கைவேலை, புலப்பயிற்சி, விளையாட்டு, கதைகூறல், நடிப்பு, கலை பண்பாடு, கையெழுத்துப் பயிற்சி என்கிற அணுகுமுறைகளை உள்ளடக்கியதாக உள்ளது. ஆசிரியர் கையேட்டின் தொடர்ச்சியாக இந்த ஆண்டில் ( 2007 - 08) மாணவர்களுக்கான இந்தப் பாடநூலானது வெளியிடப்படுகிறது.

மலர் வகுப்பிற்கான இந்தப் பாடத்திட்டத்தை உருவாக்க ஒத்துழைத்த தமிழகத்தின் பாவலர்கள், தாய்த்தமிழ்ப் பள்ளி ஆசிரியர்கள். மாணவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்களின் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்

அன்புடன்,

ம. நடேசன்., முதுநிலை விரிவுரையாளர்
பேச : (04259) 221278 - 98420 02957
**www.thamizham.net - pollachinasan@gmail.com**



www.thamizham.net - Free E book - Education

**வரைந்து பழகுக**

**நேர் கோட்டுப் படங்கள்**



**வளை கோட்டுப் படங்கள்**





www.thamizham.net - Free E book - Education

## படம் பார்த்துப் பெயர் சொல்
















www.thamizham.net - Free E book - Education

படம் பார்த்துப் பெயர் சொல்
































www.thamizham.net - Free E book - Education

## ஒலித்துப் பழகுக

ட , ப , ம , ய , ர , ழ

ட் , ப் , ம் , ய் , ர் , ழ்

டா , பா , மா , யா , ரா , ழா

## எழுதிப் பழகுக

ட ப ம ய ர ழ

க ச ட த ப ற

ய ர ல வ ழ ள

ங ஞ ண ந ம ன



www.thamizham.net - Free E book - Education

அ ஆ இ ஈ

உ ஊ எ ஏ ஐ

ஒ ஓ ஔ ஃ

---

க் ச் ட் த் ப் ற்

ய் ர் ல் வ் ழ் ள்

ங் ஞ் ண் ந் ம் ன்

கா சா டா தா பா றா

யா ரா லா வா ழா ளா

ஙா ஞா ணா நா மா னா



www.thamizham.net - Free E book - Education

## வரைந்து பழகுக , வண்ணம் தீட்டுக







www.thamizham.net - Free E book - Education




தமிழே அமுதே நீ வாழ்க
தண்டமிழ் மொழியே நீ வாழ்க
தேனே சுவையே நீ வாழ்க
தென்றல் காற்றே நீ வாழ்க

பொதிகை பிறந்த பூந்தமிழே
பூமகளே உன் புகழ் வாழ்க
இமையம் போலே நீ உயர்ந்து
என்றும் புகழாய் வாழியவே.

அம்மாவுக்கும் அப்பாவுக்கும்
செல்லப் பிள்ளை நான்
அண்ணனுக்கும் தம்பிக்கும்தான்
அன்புப் பிள்ளை நான்
ஆசிரியர் அனைவருக்கும்
ஆசைப் பிள்ளை நான்
பாடம் படித்து உயர்ந்திடவே
படிக்கும் பிள்ளை நான்





அம்மா கண்ணே அருகே வா
அழகுச் சிலையே அருகே வா
அப்பா செல்லம் அருகே வா
அழகுக் கிளியே அருகே வா

பட்டே சிட்டே அருகே வா
பழமே சுவையே அருகே வா
மொட்டே மலரே அருகே வா
முந்திரிச் சுவையே அருகே வா


www.thamizham.net - Free E book - Education

அணிலே அணிலே ஓடி வா
அழகு அணிலே ஓடி வா
கொய்யா மரம் ஏறி வா
குண்டுப் பழம் கொண்டு வா
பாதிப்பழம் உன்னிடம்
பாதிப்பழம் என்னிடம்
கூடிக் கூடி இருவரும்
கொறித்துக் கொறித்துத் தின்னலாம்.





தோ... தோ... நாய்க்குட்டி
துள்ளி வா வா நாய்க்குட்டி
உன்னைத்தானே நாய்க்குட்டி
ஓடி வா வா நாய்க்குட்டி
கழுத்தில் மணியைக் கட்டுவேன்
கறியும் சோறும் போடுவேன்
இரவில் இங்கே தங்கிடு
எங்கள் வீட்டைக் காத்திடு.

ஊஞ்சல் அழகு ஊஞ்சலாம்
உயர்ந்து தாழும் ஊஞ்சலாம்
இறக்கை இன்றி வானிலே
எடுத்துச் செல்லும் ஊஞ்சலாம்
உந்தி உந்தி ஆட்டினால்
உயர உயரப் போகுமாம்
ஊக்கம் உள்ள மாந்தரே
உயர்வு காண்பர் வாழ்விலே.



பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலம்செய்
துங்கக் கரிமுகத்து தூமணியே நீ எனக்கு
சங்கத் தமிழ் மூன்றும் தா

ஔவையார்


www.thamizham.net - Free E book - Education



கா கா என்னும் காக்கை பார்
கொக் கொக் என்னும் கோழி பார்
குக்கூ என்னும் குயிலைப் பார்
குர்... குர்... என்னும் குரங்கைப் பார்
ஒலிக்கும் ஒலியே பெயராகும்
இதுவே தமிழின் வளமாகும்.

பால் பால் என்ன பால்?
மாட்டுப்பால்.
என்ன மாடு? பசு மாடு.
என்ன பசு? நாட்டுப் பசு.
என்ன நாடு? தமிழ் நாடு.
என்ன தமிழ்? செந்தமிழ்.





மண் அரிப்பைக் காத்திடும்
மழையை நமக்குத் தந்திடும்
உயிரினங்கள் உண்டிட
உயர் கனிகள் தந்திடும்
நிழல் கொடுத்து நின்றிடும்
நிறைய காற்று தந்திடும்
காட்டு மரங்கள் பலவகை
கருத்தாய் நாமும் வளர்க்கலாம்.

பசிக்கு வேண்டும் சோறு
பயிர் செழிக்க ஆறு
வசிக்க நல்ல வீடு
வாய் மணக்கப் பாடு
கனி கொடுக்கும் மரம்
கொண்டைக்குப் பூச்சரம்.





www.thamizham.net - Free E book - Education



எதற்கும் உண்டு விலை
சிலந்தி பின்னும் வலை
கல்லைச் செதுக்கச் சிலை
ஆடல் பாடல் கலை.

செல்வம் சேர்த்தால் வளம்
உண்மைச் செல்வம் நலம்
மொழியைக் காக்கும் நிலம்
ஒன்றே மாந்தர் குலம்.

வேப்பிலையைத் தின்னலாம்
விரும்பித் துளசி தின்னலாம்
காத்திடலாம் உடல்நலம்
கருதித்தின்றால் கேடில்லை
பாகற்காயோ கசப்புத்தான்
பழகிப்போனால் இனிப்புத்தான்
நாவுக்காக வாழாமல்
நலத்துக்காக வாழ்வோமே.



நெல்லு மூக்குக் குருவியே
நித்தம் எங்கு செல்கிறாய்?
கடுகு விழிக் குருவியே
காலை எங்கு செல்கிறாய்?



குட்டையான உடம்பையே
எந்தக் குளத்தில் நனைக்கிறாய்?
தத்தித் தத்தி விண்ணிலே
தாவிப் பறக்கப் பார்க்கிறாய்.



நீயும் நானும் நண்பர்கள்
நிதமும் சேர்ந்து மகிழுவோம்
ஓடிவாயேன் குருவியே
ஒன்றாய் நாமும் பாடலாம்.



www.thamizham.net - Free E book - Education

இனிப்புச் சுவைக்கு மாம்பழம்
புளிப்புச் சுவைக்கு எலுமிச்சை
உறைப்புச் சுவைக்கு மிளகாயாம்
துவர்ப்புச் சுவைக்கு பாக்குதாம்
உவர்ப்புச் சுவைக்கு உப்புக்கல்
கசப்புச் சுவைக்கு பாகற்காய்
ஆறு சுவைகள் இவையென்றால்
இவற்றின் கலப்போ ஆயிரமாம்.







சூரியன் வருவது எதனாலே?
சுழலுது உலகம் அதனாலே.
சந்திரன் தெரிவது எவராலே?
சரியும் கதிரவன் ஒளியாலே.
காரிருள் வானில் மின்மினிபோல்
கண்ணில் படுவன அவை என்ன?
கணக்கில் அடங்கா விண்மீன்கள்
கண்ணில் படுவதை நாமறிவோம்.
பேரிடி மின்னல் எதனாலே?
மோதுது மேகம் அதனாலே.
பெருமழை பெய்வது எதனாலே?
குளிருது மேகம் அதனாலே.
யாரிகற்கெல்லாம் அதிகாரி?
எவரும் இதற்கில்லை அதிகாரி.
எல்லாம் இயல்பாய் நடக்கிறது
இதைநாம் எண்ணிட வேண்டாமோ?



சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில்
இட்டார் பெரியார் இடாதார் இழிகுலத்தார்
பட்டாங்கில் உள்ள படி.

ஔவையார்



www.thamizham.net - Free E book - Education

கா கா கா கா காக்கையிடம்
கூடி வாழக் கற்றிடலாம்
கீக்கீ கீக்கீ கிளியிடமோ
கொஞ்சிப் பேசக் கற்றிடலாம்
கூக்கூ கூக்கூ குயிலிடமோ
குரலின் இனிமை கற்றிடலாம்
கொக்கொக் கொக்கொக் கோழியிடம்
தாயின் அன்பைக் கற்றிடலாம்
வா வா வா வா பள்ளிக்கு
வந்தால் தமிழைக் கற்றிடலாம்.









குட்டி குட்டி எறும்புகள்
கூட்டம் கூடும் எறும்புகள்
கடுகு போல எறும்புகள்
காலால் நடக்கும் எறும்புகள்.
வரிசை போட்டுச் சென்றிடும்
வழிகொடுத்து ஒதுங்கிடும்
உணவுப் பொருள் தேடியே
உழைத்து நாளும் சேர்த்திடும்.
சுற்றம் தழுவி நின்றிடும்
சற்றும் அயரா எறும்புகள்
கற்றுக்கொள்ள வேண்டுமே
ஒற்றுமையை நாமுமே.

பட்டாம் பூச்சி போலவே
பறந்து திரிய வேண்டுமே
சிட்டுக் குருவி போலவே
சிறகு விரிக்க வேண்டுமே
வண்ணக் கிளியைப் போலவே
வானில் பறக்க வேண்டுமே
எண்ணம் போகும் இடமெல்லாம்
எழுந்து பறக்க வேண்டுமே
சின்ன மீன்கள் போலவே
நீரில் நீந்த வேண்டுமே
மின்மினிகளைப் போலவே
மின்னிப் பறக்க வேண்டுமே.









www.thamizham.net - Free E book - Education

அன்பாய் நானும் இருப்பேனே
ஆசையாகப் படிப்பேனே
இனிய சொற்கள் சொல்வேனே
ஈவிரக்கம் கொள்வேனே
உழைத்தே நானும் பிழைப்பேனே
ஊர்தியில் மெதுவாய்ச் செல்வேனே
என்றும் தமிழைப் படிப்பேனே
ஏற்றத்தாழ்வினை மறப்பேனே
ஐ.நா.சபைக்கும் செல்வேனே
ஒற்றுமையாக வாழ்வேனே
ஓடும் நதிகளை இணைப்பேனே
ஔவையாரை மதிப்பேனே
அஃறினை உயிர்களை மதிப்பேனே.





மாம்பழமாம் மாம்பழம்
மஞ்சள்நிற மாம்பழம்
மாமரத்து மாம்பழம்
மாமாதந்த மாம்பழம்
எங்கள் வீட்டு மாம்பழம்
எங்கள் நாட்டு மாம்பழம்
தாய்நாட்டு மாம்பழம்
தமிழ்நாட்டு மாம்பழம்.



குண்டு குண்டாய் எழுதுவேன்
கோணல் இன்றி எழுதுவேன்
கண்டு மகிழும் வண்ணமே
கன்னித் தமிழில் எழுதுவேன்

முத்து முத்தாய் எழுதுவேன்
முயற்சி செய்து எழுதுவேன்
பத்து வரிகள் நாளுமே
பயிற்சி செய்து எழுதுவேன்.

நேர்த்தியாக எழுதுவேன்
நிறுத்தி நன்கு எழுதுவேன்
பார்த்தவர்கள் எளிதிலே
படிக்குமாறு எழுதுவேன்.





www.thamizham.net - Free E book - Education

குயிலைப் போலக் கூவிப் பார்த்தேன்
கூவ முடிகிறது - நான்
மயிலைப் போல ஆடிப் பார்த்தேன்
ஆட முடிகிறது.
மீனைப் போல நீந்திப் பார்த்தேன்
நீந்த முடிகிறது - நான்
மானைப் போல ஓடிப் பார்த்தேன்
ஓட முடிகிறது.
முடியும் என்று முயன்று பார்த்தேன்
எல்லாம் முடிகிறது - நீயும்
முடியும் என்று முயற்சி செய்தால்
எதுதான் முடியாது?



நாயின் ஒலியோ குரைத்தல்
நரியின் ஒலியோ ஊளை
குயிலின் ஒலியோ கூவல்
மயிலின் ஒலியோ அகவல்
கூகை ஒலியோ குழறல்
கிளியின் ஒலியோ மிழற்றல்
ஆந்தை ஒலியோ அலறல்
அரிமா ஒலியோ முழக்கம்
கழுதை ஒலியோ கத்தல்
ஒவ்வொரு ஒலிக்கும் ஒரு பெயர்
தமிழில் உண்டு உரைப்பாய்.

மாட்டின் வாலோ நெட்டை
ஆட்டின் வாலோ குட்டை
நாயின் வாலோ மேலே
நரியின் வாலோ கீழே கற்றை
எலியின் வாலோ மொட்டை
குரங்கின் வாலோ நீளம்
குருவி வாலோ நீலம்



பறவை பறந்து வந்தது
பட பட வென ஒலித்தது
*கசடதபற* என்பது போல்
காதில் ஒலியும் கேட்டது.
பறவை பார்த்த பூனையும்
மியாவ் மியாவ் என்றது
பூனை ஒலி எனக்குமே
*ஙஞண நமண* என்றது
பூனை பார்த்த கிளியாரும்
யார் அவன் என்றது
கிளியின் குரல் எனக்குமே
*யரல வழள* என்றது



www.thamizham.net - Free E book - Education




கணிப்பொறியாம் கணிப்பொறி
கணக்குப்போடும் கணிப்பொறி
மணித்துளியில் நூறுவகை
மாற்றம் செய்யும் கணிப்பொறி
அச்சு வேலை செய்யலாம்
அழகுப் பொம்மை போடலாம்
வேண்டும் பொழுது மகிழ்ந்திட
விளையாட்டும் ஆடலாம்
அறிவு உலகின் நுட்பங்கள்
அறிய இதனைக் கண்டனர்
இளைய தம்பி இதனை நீ
இயக்க இன்றே பழகிடு.

கண் இரண்டால் பார்க்கலாம்
காது இரண்டால் கேட்கலாம்
கை இரண்டால் செய்யலாம்
கால் இரண்டால் நடக்கலாம்
மூக்கு ஒன்றால் முகரலாம்
முகம் ஒன்றால் மலரலாம்
வாய் ஒன்றால் பேசலாம்
வளர நாளும் படிக்கலாம்.





காய்ச்சிய நீரைக் குடி குடி
கரும்பை நன்றாய் கடி கடி
தாய்மொழிக் கல்வி படி படி
தடையாம் சுவரை இடி இடி
காற்றில் மாசு வடி வடி
மண்ணில் கழிவு துடி துடி
சாதிப் பாம்பை அடி அடி
துணிந்து செயலை முடி முடி

சிட்டுக்குருவி வானிலே
சிறகடித்துப் பறக்குது
கொட்டும் அருவி மலையிலே
சலசலத்துக் கொட்டுது
குருவி போல நாமுமே
கூடி வாழப் பழகுவோம்
அருவி போல நாமுமே
அனைவர் போற்ற வாழுவோம்



www.thamizham.net - Free E book - Education

எண்ணிப் பழகுக
படத்தின் பெயர் சொல்லுக

1



2



3





www.thamizham.net - Free E book - Education

4



5



6



7





www.thamizham.net - Free E book - Education

8



9



10



1 2 3 4 5

6 7 8 9 10



www.thamizham.net - Free E book - Education

எத்தனை எத்தனை உள்ளது என எண்ணி எழுதுக







www.thamizham.net - Free E book - Education

எழுதிப் பழகுக

1 2 3 4 5

6 7 8 9 10

11 12 13 14 15

16 17 18 19 20

சொல்லிப் பழகுக

10 20 30 40 50

60 70 80 90 100

5 10 15 20 25 30 35 40 45 50

55 60 65 70 75 80 85 90 95 100



www.thamizham.net - Free E book - Education

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |
| 51 | 52 | 53 | 54 | 55 | 56 | 57 | 58 | 59 | 60 |
| 61 | 62 | 63 | 64 | 65 | 66 | 67 | 68 | 69 | 70 |
| 71 | 72 | 73 | 74 | 75 | 76 | 77 | 78 | 79 | 80 |
| 81 | 82 | 83 | 84 | 85 | 86 | 87 | 88 | 89 | 90 |
| 91 | 92 | 93 | 94 | 95 | 96 | 97 | 98 | 99 | 100 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 4 | 3 | 2 | 1 |



www.thamizham.net - Free E book - Education

## எண்ணி எழுதுக, பிறகு கூட்டல் மற்றும் கழித்தல் செய்க





## கூட்டல் செய்க

குவளை எண்ணிக்கை + குடம் எண்ணிக்கை =

குடம் எண்ணிக்கை + விளக்கு எண்ணிக்கை =

மின் விளக்கு + குடை எண்ணிக்கை =

பூட்டு + மிதியடி எண்ணிக்கை =

மின் விசிறி + இருக்கை எண்ணிக்கை =

இருக்கை எண்ணிக்கை + மிதியடி எண்ணிக்கை =

கடிகாரம் + பூட்டு எண்ணிக்கை =

இருக்கை + குவளை எண்ணிக்கை =

மின் விளக்கு + மிதியடி எண்ணிக்கை =

குடம் + கடிகாரம் எண்ணிக்கை =



www.thamizham.net - Free E book - Education




$12 + 16 = 28$

$12 + 16 = \square$ $\quad$ $11 + 15 = \square$

$11 + 12 = \square$ $\quad$ $15 + 13 = \square$

$15 + 10 = \square$ $\quad$ $12 + 11 = \square$

$16 + 13 = \square$ $\quad$ $12 + 16 = \square$

$14 + 11 = \square$ $\quad$ $17 + 12 = \square$



www.thamizham.net - Free E book - Education











www.thamizham.net - Free E book - Education

**கணிதம், கழித்தல்**




28 - 16 = 12

16 - 10 = □

21 - 11 = □

19 - 12 = □

15 - 13 = □

25 - 12 = □

29 - 15 = □

27 - 13 = □

22 - 11 = □

24 - 13 = □

28 - 12 = □



www.thamizham.net - Free E book - Education

சரியான விடையை எழுதுக.






www.thamizham.net - Free E book - Education

## மலர் வகுப்பு மாணவர்களால் படிக்க இயலுகிற சொற்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| அம்மா | ஈக்கள் | கடல் | தாராளம் | மங்கலம் |
| அப்பா | ஈயம் | கண் | தாழ்வாரம் | மடத்தனம் |
| அக்கா | ஈரம் | கலகம் | நகம் | மன்றம் |
| அண்ணன் | ஈதல் | கணம் | நடனம் | மாங்காய் |
| அவர்கள் | ஈர்ப்பு | கம்மல் | நலம் | மயக்கம் |
| அவள் | ஈசல் | கப்பல் | நந்தனம் | மண்டபம் |
| அவன் | உடல் | கஞ்சன் | நந்தன் | மஞ்சள் |
| அந்த | உலகம் | களம் | நந்தவனம் | மந்தனம் |
| அகலம் | உரம் | கல் | நாகம் | மச்சம் |
| அச்சம் | உள்ளம் | கட்டடம் | நாணம் | மதன் |
| அரம் | ஊடல் | கட்டம் | நந்தன் | மானம் |
| அறம் | ஊதல் | கால் | நந்தவனம் | வசம் |
| அன்னம் | ஊசல் | காலம் | நாணயம் | வாசம் |
| அகல் | ஊகம் | காரம் | நாணம் | வாமணன் |
| ஆட்டம் | ஊனம் | காகம் | நாணல் | வந்த |
| ஆணவம் | ஊண் | காவல் | நாள் | வாய் |
| ஆலமரம் | என்ன | சக்கரம் | நான் | வாணம் |
| இடம் | எமன் | சாணம் | நாய் | வளம் |
| இனம் | எந்த | சாம்பல் | நாட்டம் | நாத்தம் |
| இயல் | எண்கள் | ஞாலம் | பண்டம் | வங்கம் |
| இமயம் | ஏன் | தரம் | பள்ளம் | பந்தயம் |
| இரசம் | ஏலம் | தகரம் | பட்டம் | பாதகன் |
| இரங்கன் | ஏளனம் | தச்சர் | பஞ்சம் | பாடான் |
| இரஞ்சன் | ஐவர் | தடம் | பந்தம் | நாமம் |
| இரணம் | ஐயம் | தகர்த்தல் | பாவாணர் | நாணயம் |
| இராகம் | ஐயா | தன்மானம் | பாடகன் | இலவங்கம் |
| இராவணன் | ஐயன் | தாளம் | பாய்மரம் | இதயம் |
| இராத்தல் | ஒட்டகம் | தாயகம் | மணம் | தங்கம் |
| இகம் | ஓடம் | தாய் | மனம் | தாகம் |
| இலவங்கம் | ஓணான் | தாள் | மடம் | ஊடகம் |
| இலஞ்சம் | ஓலம் | தாரை | மாற்றம் | ஊக்கம் |



www.thamizham.net - Free E book - Education

ஒவ்வொரு வரிசையிலும் சரியான வடிவங்களை வரைக.




www.thamizham.net - Free E book - Education

வண்ணம் தீட்டுக





www.thamizham.net - Free E book - Education

## மதிப்புறவுச் சொற்கள்.

நல்ல சொற்களை நம் மழலையர்கள் பேசட்டும்.
நல்ல செயற்பாடுகளால் நம் மழலையர்கள் மேலெழட்டும்.
நல்ல பழக்கங்களை நம் மழலைகளுக்கு நாம் சொல்லித் தருவோம்

வணக்கம் - அய்யா வணக்கம், அம்மா வணக்கம், அப்பா வணக்கம், அக்கா வணக்கம், தம்பி வணக்கம், தங்கை வணக்கம், அனைவருக்கும் வணக்கம்.

வாங்க - அய்யா வாங்க, அப்பா வாங்க, அம்மா வாங்க, அண்ணா வாங்க தம்பி வாங்க, தங்கை வாங்க, அனைவரும் வாங்க, வணக்கம் வாங்க.

நன்றி - அய்யா நன்றி, அப்பா நன்றி, அம்மா நன்றி, அக்கா நன்றி, அண்ணா நன்றி, தம்பி நன்றி, தங்கை நன்றி, அனைவருக்கும் நன்றி

தாருங்கள் (தாங்க) - பலப்பம் தாங்க, எழுதுபலகை தாங்க, கை தாங்க, குவளை தாங்க, புத்தகம் தாங்க

எடுங்கள் (எடுங்க) - பை எடுங்க, கரிக்கோல் எடுங்க, கைத்துணி எடுங்க, கல் எடுங்க, குச்சி எடுங்க அட்டை எடுங்க, துணி எடுங்க, இருக்கை எடுங்க, குறிப்பேடு எடுங்க

வாருங்கள் (வாங்க) - சாப்பிட வாங்க, குளிக்க வாங்க, விளையாட வாங்க, எழுத வாங்க, படிக்க வாங்க. வட்டத்திற்குள் வாங்க, நடந்து வாங்க, நிமிர்ந்து வாங்க, ஓடி வாங்க, தண்ணீர் குடிங்க, தண்ணீர் ஊற்றுங்க. வகுப்பறை கூட்டுங்க, பாடம் படிங்க, சோறு சாப்பிடுங்க, வட்டமாய் நில்லுங்க, வட்டத்திற்குள் போங்க, வரிசையாய் நில்லுங்க, மணி அடிங்க, சிறுநீர் போங்க. மின்விசிறி போடுங்க, பாட்டு கேளுங்க, ஆட்டம் ஆடுங்க, சீருடை போடுங்க. மிதியடி எடுங்க, பொத்தான் போடுங்க, குவளையை கொடுங்க, மேல் சட்டை போடுங்க. பாவாடை கட்டுங்க, கால்சட்டை போடுங்க, தொலைக்காட்சி பாருங்க, வானொலி கேளுங்க. கழிப்பறை போங்க, விளக்கை போடுங்க, தண்ணீரால் கழுவுங்க, கையைக் கழுவுங்க, சிந்தாமல் சாப்பிடுங்க, குப்பையைப் போடாதிங்க, குப்பையை எடுங்க, வீட்டுக்கு போங்க, சாப்பிட்டு படுங்க, கைநகம் வெட்டுங்க, எண்ணெய் தடவுங்க,

**நன்றி மீண்டும் சந்திப்போம்,**
**நன்றி மீண்டும் நாளை சந்திப்போம்.**


www.thamizham.net - Free E book - Education

மிதிவண்டித் தொடரி அறுந்துவிட்டது (Cycle chain)
தானியங்கியில் விரைவாக வந்தோம் (Auto)
துள்ளுந்தின் வண்ணம் அழகாக உள்ளது (Scooter)
மகிழுந்து வந்து திரும்பியது (Pleasure Car)
மூடுந்தில் பத்து பேர் போகலாம் (Van)
வானூர்தியைப் பார்த்திருக்கிறாயா? (Aeroplane)
அரிமா காட்டின் அரசன் ( சிங்கம் )
ஓவியம் மனத்தை ஈர்க்கிறது (Drawing)
உணவகம் தூய்மையாக உள்ளது (Hotel)
மருத்துவர் நோய் நீக்குகிறார் (Doctor)
ஒலிநாடாவில் பாடல் கேட்டேன் (Tape)
இன்றைய செய்தித்தாள் படித்தாயா? (News Paper)
இசைத்தட்டில் பாடல் கேட்கலாம். (Record player)
அஞ்சல் அட்டையில் செய்தி அனுப்புவோம்.( Post card )
கல்நெய்க் கடை விரிவுபடுத்தப்படுகிறது. (Petrol)
பணம் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்( Receipt)
காரிக் கிழமை விடுமுறைநாள். ( சனிக்கிழமை )( புதன்கிழமை )
செந்தியின் பகடி சிரிப்பூட்டுவது ( தமாஷ் )
பாலம் பழுதாகி உள்ளது ( Repair)
பிறர் உதவியின்றி நானே நடப்பேன் (Help)
வணக்கம் நலமாக இருக்கிறீர்களா? ( சவுக்கியமா )
பச்சை வண்ணம் கண்ணுக்கு இனியது (Colour)
வருகைப் பதிவேட்டை எடுத்து வா (Attendence Register)
உங்கள் உடை அருமையாக உள்ளது (Super)
காலம் தாழ்த்தினால் தண்டத்தொகை உண்டு(Fine)
ஒப்பனை செய்ய இத்தனை நேரமா? (அலங்காரம்)
சாலை நேர்ச்சிகள் கவனக்குறைவால் நேர்கின்றன(விபத்து)
நல்ல தொடக்கம் பாதி வெற்றி (ஆரம்பம்)
கையூட்டுக் குற்றங்கள் கண்டிக்கத் தக்கன (லஞ்சம்)
இலவசம் என்றால் கையேந்தலாமா? (ஓசி)
சினமே உனக்குப் பெரிய எதிரி (கோபம்)
விரைவாக நீயும் நடந்து வா (சீக்கிரம்)
பிறந்தநாள் வாழ்த்துக் கிடைத்ததா? (Birthday)
உறக்கம் கலைந்தது (Sleep)
படுக்கையிலிருந்து எழுந்திரு (Bed)
இறப்புச் செய்தி வருத்தமானது. (Death)
வளமனை வீடு பார்க்க அழகாய் இருக்கும்(Bunglow)
கடை திறந்திருக்கிறது. (Shop)
அப்பாவுக்கு இரவு வேலை முறை (Night shift)
சுற்றுச் சுவர் பாதுகாப்புத் தரும் : (Compound)



www.thamizham.net - Free E book - Education

## மாணவர்கள் தன் சோதனைப் படிவம் - **கை வேலைத் திறன்**

மாணவர்கள் கைவேலைத் திறனைச் செய்து முடித்ததும் கட்டத்திற்குள் ☑ செய்யவும்

☐ ஆற்று மணலில் வீடுகட்டுதல். விரும்புகிற உருவங்கள் செய்தல்
☐ களிமண்ணைக் கொடுத்து விரும்பிய உருவங்கள் செய்ய வைத்தல்.
☐ தேங்காய் நாரில் பொம்மைகள் செய்யப் பயிற்சி தருதல்.
☐ துணி, பஞ்சு, அட்டை - பயன்படுத்தி உருவங்கள் செய்தல்

☐ வண்ணத்தாளைக் கிழித்து, தாளில் பசை தடவி ஒட்டுதல். வண்ணத்தாளை வரைந்த உருவங்கள் மேல் ஒட்டுதல், வண்ணத்தாளை எட்டு பகுதியாக மடித்து கத்தரிக்கோலால் வெட்டுதல். பல்வேறு வடிவங்களை உருவாக்கி ஒட்டுதல்,

☐ துண்டுக் கட்டைகளைக் கொடுத்து வீடுகட்டுதல். சதுரம், முக்கோணம், செவ்வகக் கட்டைகளைக் கொடுத்து ( கட்டைகள் பல்வேறு வண்ணம் உடையதாக இருந்தால் சிறப்பாக இருக்கும்) விரும்பிய வடிவங்கள் வீடு, மேடை, பாலம், கட்டடம், மாடி, வடிவங்கள்) ஆக்கச் செய்தல்

☐ மருந்தில்லாத தீக்குச்சிகளைக் கொடுத்து அடுக்குதல். உருவங்கள் ஆக்குதல்.
☐ காய்கறிகளைக் குறுக்காக வெட்டி வண்ணத்தில் தோய்த்து அச்சடித்தல்.
☐ வண்ணக் கயிற்றில் சடை பின்னுதல்.

☐ தாள் துணிகளைச் சரியாக மடிக்கப் பயிற்றுவித்தல்.
☐ தாளைச் சரியாக மடித்துக் கிழிக்கப் பயிற்சி தருதல்.
☐ தாளில் விசிறி, கப்பல் செய்யப் பயிற்சி தருதல்.

☐ அமுக்கு பொத்தான், சட்டைப் பொத்தான் போடப் பயிற்சி தருதல்
☐ கொக்கி மாட்டப் பயிற்சி தருதல்.
☐ கயிற்றில் முடிபோடப் பயிற்சி தருதல்.

☐ விரும்புகிற படங்களை வரைதல்.
☐ வரைந்த படத்திற்கு வண்ணம் கொடுக்க வைத்தல்
☐ வரைந்த படத்தின் மீது கல் அடுக்குதல்
☐ வரைந்த படத்தின் மீது புளியங்கொட்டை அடுக்குதல்





www.thamizham.net - Free E book - Education

## மாணவர்கள் தன் சோதனைப் படிவம் - **விளையாட்டு**

மாணவர்கள் விளையாட்டை விளையாடி முடித்ததும் **கட்டத்திற்குள்** ☑ செய்யவும்

☐ நேர் கோட்டில் நடத்தல், உட்காருதல், குதித்தல், தாண்டுதல்.

☐ வளைகோட்டில் நடத்தல், ஓடுதல், உட்காருதல், வளைகோட்டில் ஓடிக்கொண்டிருக்கும் பொழுது, ஒலி கேட்டால் நிற்றல், உட்காருதல்

☐ எளிய உடற்பயிற்சி, கை, கால் அசைவுகள், குனிந்து நிமிர்தல் போன்றவைகள்.

☐ ஓடுதல், கரணம் அடித்தல், தொட்டு விளையாடுதல்.

☐ கயிற்றை நேராக வைத்து அதன் மீது நடத்தல்.

☐ சமநிலைப்பலகை. நடக்கவைத்தல்.

☐ கயிற்று ஏணி வழியாக ஏறுதல்.

☐ மரம் ஏறுதல், 1 அடி விட்டமுள்ள குழாயில் ஏறுதல்.

☐ ஊஞ்சல் விளையாட்டு. தட்டாமாலை சுற்றுதல். பல்லாங்குழி விளையாட்டு.

☐ சக்கரம் கொடுத்து உருட்டச் செய்தல், நேர்கோட்டின் மீது சரியாக உருட்டச் செய்தல்.

☐ கயிற்றைப் பிடித்துக்கொண்டு தொங்குதல். கயிற்றை இரண்டு மரங்களுக்கிடையில் கட்டிவிட்டு கயிற்றைப் பிடித்துத் தொங்கிக்கொண்டு ஒரு முனையிலிருந்து மறு முனைக்கு நகருதல்.

☐ வாத்து - தவளை போல நடத்தல்

☐ கண்ணைக் கட்டிக் கொண்டு தேடுதல். எம்பிக் குதித்து பழம் பெறுதல்.

☐ பந்தை உருட்டுதல், பந்தை குழாய்க்குள் போடுதல், வளையத்திற்குள் சரியாகப் போடுதல்

☐ பந்தை எறிதல், பந்தை இலக்கு நோக்கி எறிதல்

☐ பந்தைப் பின் பக்கம் வீசுதல்

☐ ஒருவர் பந்தை வீச மற்றொருவர் பந்தைப் பிடித்தல்.

☐ கல் அல்லது மரத்தாலான (5 கிலோ) உருளையை கை, கால்களால் உருட்டுதல்.

☐ டயர் மீது சறுக்குதல், டயரைக் கட்டி அதில் ஊஞ்சல் ஆடுதல்

☐ கண்ணைத் துணியால் கட்டிக் கொண்டு பிடிக்கிற விளையாட்டு

☐ தலை, கண், கை, கால் இயக்கத்திற்கான எளிய உடற்பயிற்சி, தலையை முன்னும் பின்னும், பக்கவாட்டில் அசைத்தல், கண்விழியை மேலே கீழே வட்டமாக அசைத்தல்

☐ வட்டம் போட்டு, வட்டத்திற்கு உள்ளேயும் வெளியேயும் கட்டளைக்கு ஏற்ப குதித்தல்

☐ வணக்கம் விளையாட்டு





www.thamizham.net - Free E book - Education

## மாணவர்கள் தன் சோதனைப் படிவம் - **புலன் பயிற்சி**

கண், காது, மூக்கு, வாய், மெய் ஆகிய ஐந்து புலன்களும் அறிவின் நுழைவாயில்கள் ஆகும். புலன்கள் சரியாக, இயல்பாக இயங்கவேண்டும். சரியாகத் திட்டமிட்டு ஐம்புலன்களுக்கும் பயிற்சி அளித்தால் அது மாணவர்களது எதிர்கால அறிவு நுட்பத்திற்கு அடித்தளமாக இருக்கும்.

☐ **வண்ணங்கள் அறிதல்** அடிப்படை வண்ணமான **நீலம், மஞ்சள், சிவப்பு ஆகிய மூன்று** வண்ணங்களையும், ஒன்றுடன் ஒன்று இணைத்து அதனால் வரும் புதிய வண்ணங்களையும் அறிமுகப்படுத்துதல், ஒரே வண்ணப் பொருள்களை இணைசேர்த்தல்.

☐ **பொருள்களை உற்றுநோக்குதல், அடையாளம் காணுதல்.**

☐ மாணவர்கள் வாழுகிற சுற்றுச் சூழலில் உள்ள பொருள்களைத் திரட்டி வரச்செய்தல். திரட்டிய பொருள்களை அவற்றின் பொதுத் தன்மைகளின் (உயிருள்ளது, உயிரற்றது - பெரியது, சிறியது - வண்ணம் - கடினம், மென்மை - வழவழப்பு, சொரசொரப்பு) அடிப்படையில் வகைப்படுத்த ஊக்குவித்தல். வாரம் ஒரு செயல் ஊக்குவித்தால் போதும்.

☐ **பொருள்களைப் பிரித்து எடுத்தல், வகைப்படுத்துதல் (வண்ண மணிகள், விதைகள்,** காசுகள் போன்றவற்றைக் கலந்து கொடுத்து அவற்றை பிரித்து எடுத்து வகைப்படுத்த ஊக்குவித்தல், வழிநடத்துதல்)

☐ **ஒரு ஏனத்திலிருந்து மற்றொரு ஏனத்திற்கு மண் அல்லது நீரை சரியாக ஊற்றுதல்**

☐ **வண்ணப்படங்களை பத்து துண்டுகளாக வெட்டி பொருத்தச் செய்தல்.**

☐ **நூலில் வண்ண மணிகளைக் கோர்த்தல். விரும்புகிற எண்ணிக்கையில் கோர்த்தல்**

☐ **ஏதேனும் மூன்று (வெள்ளை, பச்சை, மஞ்சள்) வண்ண மணிகளைக் கலந்து** கொடுத்து, அவைகளைத் தனித் தனி வண்ணங்களாகப் பிரித்து, கொடுக்கப்பட்ட நூலில் ஒன்றன் மேல் ஒன்றாகக் கோர்த்தல் - சம எண்ணிக்கையில் கோர்த்தல்

---

☐ **கேட்டல். ஒலிகளை எழுப்பச் செய்தல், ஒலிகளை அடையாளம் காணுதல்** தீப்பெட்டியில் மணிகளைப் போட்டு ஆட்டிப்பார்த்து மணிகளின் எண்ணிக்கை அறிதல் அருகில், தொலைவில் நிற்க வைத்து உரத்து, மெதுவாகப் பேசி பேசியது என்ன என்று கேட்டல், காதை மூடிக்கொண்டு கேட்டதைச் சொல்ல வைத்தல்.

☐ **சுவைத்தல். இனிப்பு, புளிப்பு, கசப்பு, துவர்ப்பு, காரம், உவர்ப்பு என்கிற 6 சுவைகளையும்** சுவைக்கச் செய்து வேறுபாடு அறிய வைத்தல் (பாக்கு, மிளகாய், உப்பு பயன்படுத்தவும்)

☐ **நுகர்தல். ஊதுவர்த்தி, சந்தனம், பூண்டு, மல்லிகை, வெங்காயம்** முதலியவற்றை நுகர்ந்து அறியச்செய்தல்.

☐ **தொடு உணர்வு.** வழவழப்பு சொரசொரப்பு **இரண்டிற்கும் இடையேயுள்ள** வேறுபாட்டினை கண்களை மூடிக்கொண்டு தடவிப்பார்த்து உணரவும், அடையாளம் **காட்டவும் பயிற்சி அளித்தல். கூர்மை, மொன்னை வேறுபாடு அறிய வைத்தல்.**

---

மாணவர்கள் பயிற்சியைச் செய்து முடித்ததும் **கட்டத்திற்குள் ☑ செய்யவும்**



www.thamizham.net - Free E book - Education

## மாணவர்கள் தன் சோதனைப் படிவம் - **நடிப்பு**

மாணவர்கள் பயிற்சியைச் செய்து முடித்ததும் கட்டத்திற்குள் √ செய்யவும்

- ☐ மாணவர்களிடம் அன்பாகப்பேசி, வினாக்கள் கேட்டு, இயல்பாகப் பேசவைத்தல்.
- ☐ அவர்களது உறவினர்கள் பற்றியும், பார்த்த பொருள்கள் பற்றியும் பேசவைத்தல்.
- ☐ அவர்களுக்குத் தெரிந்த விலங்குகள் போல ஒலி எழுப்பச் செய்தல்.
- ☐ இயல்பாக அவர்களோடு பேசி அவர்கள் அறிந்த ஒலியை எழுப்பச்செய்தல்.
- ☐ தவளை போலத் தத்தித் தத்தித் தாவுவதற்கு ஊக்குவித்தல்.
- ☐ வாத்து போல அசைந்து அசைந்து நடத்தல்.
- ☐ யானை போலக் கையை ஆட்டி ஆட்டி நடத்தல்
- ☐ குரங்கு போலக் குதித்துக் குதித்து ஓடுதல்
- ☐ பேருந்து ஓட்டுநராக, நடத்துநராக நடித்தல்.
- ☐ தொடர்வண்டி ஓட்டுவது போல நடித்தல்.
- ☐ விண்வெளி இயந்திர மனிதன் போல தலைக்கவசம் அணிந்து நடத்தல், பேசுதல்.
- ☐ காய்கறி வணிகராக நடித்தல்





www.thamizham.net - Free E book - Education

உலக நீதி
ஆசிரியர்: உலகநாதர்

ஓதாமல் ஒருநாளும்
இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு
சொல்ல வேண்டாம்
மாதாவை ஒருநாளும்
மறக்க வேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோடு
இணங்க வேண்டாம்
போகாத இடந்தனிலே
போக வேண்டாம்
போகவிட்டுப் புறம் சொல்லித்
திரிய வேண்டாம்

**விடுகதை**

1. அந்திக் கிழக்கே அதிகாலை மேற்கே
அது என்ன ? (வானவில்)
2. வாயிலே தோன்றி வாயிலே
மறையும் பூ அது என்ன ? (சிரிப்பு)
3. ஆட்டி விட்டால் ஆடுது
அந்தரத்தில் தொங்குது
அது என்ன ? (ஊஞ்சல்)
4. வரிக்குதிரை ஓடியது
வாய்ப்பாட்டு பாடியது
அது என்ன ? (இசைத்தட்டு)
5. முத்து முத்தாய்த் தோரணம்
தரையில் விழுந்து ஓடுது
அது என்ன ? (மழை)

**மாணவர் தன் குறிப்புப் படிவம்,** (வகுப்பு ஆசிரியர் நிரப்பவும்)

| | | |
|---|---|---|
| பெயர் | : | |
| வகுப்பு | : | |
| பிறந்த நாள் | : | |
| உயரம் | : | செ.மீ |
| எடை | : | கிலோ |
| தாய்மொழி | : | |
| தாயின் பெயர் | : | |
| பணி | : | |
| தந்தையின் பெயர் | : | |
| பணி | : | |
| உடன்பிறந்தவர்கள் | : | |
| வீட்டு முகவரி | : | |

**பாட உருவாக்கம்:** ம. நடேசன்., க.மு., அறி.மு., கல்வி.மு., தொ.தா.க.,
**ஓவியர் :** வெள்ளியங்கிரி., துறையூர்
**உதவி:** த.முத்துலெட்சுமி. மு.விஜயமாரி. ர.ராஜேஸ்வரி. ஜெ.ஜெயசுதா.
சு.மணிமேகலை. அ. ஷாலினி



www.thamizham.net - Free E book - Education













வெளியீடு : தமிழம் அறக்கட்டளை. சூளேசுவரன்பட்டி

www.thamizham.net - Free E book - Education